சிவமயம்

! ஓம் சிவாயநம !



# அமரர்.

# சின்னத்துரை பரமானந்தம்

அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

**30.11.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பாச விளக்காய் இருந்து
எமையெல்லாம் நேசமோடு
அரவணைத்து
சமூக சிந்தனையும் கல்வியறிவும் தந்து
ஒற்றுமையும் உயர்வும் காட்டி
கண்ணை இமை காப்பதுபோல் காத்து
வந்தீர் பாசத்தோடும், பரிவோடும்
எமை வளர்த்து ஆளாக்கிய
அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனின் திருவடிகளை இறைஞ்சி
இம்மலரைத் தங்கள் பாதக்கமலங்களில்
நீரோடும் கண்களோடு நெஞ்சம் நிறைந்த
பாசத்தோடும் காணிக்கையாக்குகின்றோம்.

– குடும்பத்தினர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் 04 - 06 - 1930

விண் 31 - 10 - 2014



# அமரர்.
# சின்னத்துரை பரமானந்தம்

## திதி வெண்பா

'விளங்கும் ஜய வருஷ ஐப்பசித்திங்கள்
துலங்கும் பூர்வ பட்ச அட்டமி திதியும் - பூண்ட
நன்னாளில் பரமானந்தம் எனும் மங்கள நாயகன்
இன்பமாய் சிவனடி சேர்ந்தாரே காண் '

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தனைக்
காதலான் கூப்புவார்தம் கை

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டாங் கொண்டடியேன் என் செய்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டில் நான்
மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ்இருக்க என்றார்.

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணித் திரிவாசா
வித்தகா ஞான சந்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைத்தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எந்தோநின் அன்புடமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலார் எம்பாவாய் 3

ஒண்ணித திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதோட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய் 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையான் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் போதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாட செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை யேலோர் எம்பாவாய். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றெ நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கும்நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீற்றாற்போல
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய்நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய். 18

உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப்பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லாதோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கேழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய் 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவாசகம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

(சிவபுராணம் முற்றிற்று)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்த
சுண்டுக்குளியை பிறப்பிடமாகக் கொண்ட

## சின்னத்துரை நவமணி தம்பதியரின்

## சிரேஷ்ட புத்திரன்

# பரமானந்தம்

அவர்களின்

# வாழ்க்கைச் சரிதம்

இவர் சுண்டுக்குழி விதானையார் வீதியை பிறப்பிடமாகவும் பாரதிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் தங்கச்சியம்மாவை 1954ம் ஆண்டு கரம் பற்றினார். பின் துறைமுக அதிகாரசபையில் 1959ம் ஆண்டில் இணைந்து பாரம் தூக்கியின் இயக்குனராகப் பணியாற்றினார் . இல்லறப் பயனாய் கேதீஸ்வரன், மூத்தமகனாகவும்,மங்களேஸ்வரி இரண்டாவ தாகவும், மூன்றாவதாக கமலேஸ்வரியும் நான்காவதாக கௌரிதாசனும் ஐந்தாவதாக ஜெயபரனும் ஆறாவதாக ருத்திரேஸ் வரியையும் பெற்றெடுத்தனர். நேர்மையானவர், பொறுமையின் வழிநடப்பவர். அவரிடம் கோபத்தைக் காண்பதே அரிது. இன்முகமானவர். வன்சொல் அறியாதவர். உதவிக்கரம் நீட்டுவதில் முன் நிற்பவர்.

சைவநெறியின் வழி நடப்பவர். சிவபக்தர் . கோவில் காரியங்களில் தம்மை முதல்மைப் படுத்துபவர். குடும்பத்தினர் மீது அளவு கடந்த அன்பு கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல வேலைகளையும் தம் தலைமேல் சுமத்திய குடும்ப சுமைதாங்கி. யாரிடமாவது நோய் நொடி கண்டால் துவண்டு போவார். அன்புக்கு மேலானவர்.

மருமக்கள் முறையே குமுதினி, கலானந்தசிவம் (அமரர்), சௌந்தரநாயகம் (அமரர்), சந்திரகுமாரி, ஸ்கந்தராஜா.. இவர்கள் வழியே பேரப்பிள்ளைகளாக அனோஜனா, கஸ்மீனா, துஷ்யந்தினி, கோடீஸ்வரன் பிரபுகாந், கமலகாந், ஷருன்ஜா, முகுந்தன் யதுர்ஷன், விதுர்ஷன், கபிஷன், ஜெனுஷன், ஆகியோர் மடியினை குளிர்வித்தனர் ஆதவன், அகானா, டிலக்ஷன், மிலன் ஆகியோரின் பூட்டன் என பேரும் பெற்றார்.

1990ம் ஆண்டு பணியில் இருந்து ஓய்வு பெற்றார். வீட்டிலிருந்த வேலையில் திடீரென சுகயீனமுற்று மருந்துவமனையில் சேர்க்கப்பட்டபோது 31.10.2014 அன்று மாலை 7.45 மணியளவில் விண்ணுலகு வெய்தினார்.

அன்னாரின் ஆன்மா சாந்தி யடைய இந்நாளில் நாமும் பிராத்திப்போம்.

- குடும்பத்தினர் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் போன ஐயா

கண்ணுக்குள்ளே கட்டி வைத்து
கண்ணின் மணிகளாய் வளர்தெடுத்து
மார்பிலும் தோளிலும் போட்டெமை
வளர்த்த எங்கள் ஐயா
தூக்கத்தில் தான் துவண்டீரோ
இளையமகன் கதறி அழுகின்றேன்
தூரதேசம் செல்ல வைத்து
அண்ணா வரமுன் காணாமல் போனாயே
உன் இறுதிப் பயணத்தை பார்க்கவா
மூத்த மகன் நான் வந்தேன்
இனி என்று காண்பேன் உன்முகம்
காலமெல்லாம் எம்மை எண்ணி வாழ்ந்தாயே
ஏன் கண்காணாமல் போனாயோ
எங்கள் ஐயா தெய்வமே !

- மகன்கள் -

## எங்கள் ஏக்கம் கலைய எழுந்துவர மாட்டாயோ எங்கள் ஐயா

ராணி, ராணி, என்று செவி குளிர அன்பொழுக
அழைத்து அணைத்து வளர்த்த ஐயா
உந்தன் மூத்த மகள் புலம்புகின்றேன்
சுறுசுறுப்பாய் உலவிநின்ற உனக்குள்
நோய் வந்து உன் சுறுசுறுப்பை பறித்து
உன்னைக் கட்டிலில் இருக்க வைத்தது
வைத்தியரை நாடியும் காலனவன் கொண்டு சென்றான்
உன் இளைய மகளை தூர தேசம் செல்ல விட்டு
அவள் வர முன் கண்ணுறக்கினாயே ஐயா
என் ஐயா எனப்புலம்புவது
உன் காதில் கேட்காமல் போனாயோ
துடிக்கின்றோம் உனை எண்ணி
எங்கள் துயர் துடைக்க நீரும்
எழுந்து வர மாட்டாயோ ஐயா.

- மகள்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணம் எங்கே?

மாமா உன் பயணம் எங்கே?
நோயுற்ற உன் செய்தி கேட்டு நொடிந்தோமே
பாசமே உன் செந்தாமரை முகம்
பார்க்க வாடித்தான் இருந்த வண்ணமே
உன்னைக் காணக் கிடைத்தது மாமா
கொடுமைக் காலன் பாரைவிட்டு உன்னை
பயணம் அனுப்பி விட்டான்
உன் பயணம் எங்கே
பாரில் எம்மை வாழ வழிகாட்டினீரே
நீ பெற்ற பிள்ளைகள் போல் எம்மை பாசத்தோடு பார்த்தாயே
மாற்றான் பிள்ளைகளாய் எம்மை
நினைத்தது இல்லையே மாமா
இன்று எம்மை விட்டு எந்தப்பயணம் செய்தீர்
எங்கள் துயர் துடைக்க வாராயோ!!

- மருமக்கள் -

## அன்பான வார்த்தைகளால்.........

பாசத்தின் உறைவிடமாய்
பெருமையின் பொக்கிசமாய் எமைக் காத்த
சின்னையா ஏங்கு கின்றோம் சின்னையா
அன்பான வார்த்தைகளால் அறிவுதனை ஊட்டி
பண்புடனே பார்புகழ் வேண்டுமென
அடிக்கடி கூறுவீர்கள்
இன்று ஆண்டவனுக்கே கற்பித்திட
அவனிடம் வாசம் கொண்டீரோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

- பேரமக்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் போன எங்கள் அப்பா

அன்புடன் மக்களே என்று அழைத்து
அணைத்து பண்புடன் எமை வளர்த்த
எங்கள் அப்பா
ஆலமரமாக இருந்து எங்களுக்கெல்லாம்
நிழல் கொடுத்த எங்கள் அப்பா
இனியாரை அழைப்போம் அப்பா என்று
எங்கே காண்போம் இனி உன் முகம்
துன்புற விட்டான் ஈசன்
உள்ளம் வியந்து கண்ணீர் விட்டு
கதறுகின்றோம் துடிக்கின்றோம்
இனி எப்போ காண்போம் அப்பா

**- பேரப்பிள்ளைகள் -**

## எங்கே சென்றீரோ?

அன்புக்கு வடிவான தாத்தாவே
உன்னால் நடக்க முடியாமல் இருந்தாலும் கூட
எங்களை மடியில் தூக்கி முத்தமிடுவாயே
எங்கள் தாத்தா
நாம் தாத்தா, தாத்தா என்று
தேடுகின்றோம் உன்னை வீடெங்கிலும்
காணாமல் போனாயோ
நீ நோயினால் நடக்க முடியாமல்
தடுமாறி விழுந்தால் பதறி அடித்துக்
யாரையேனுக்கு தேடுவேன் தாத்தா
உன்னை தூக்கி விட
எங்கே சென்றாய் எம்மை விட்டு
தாத்தா ஓடிவா தாத்தா
அன்புடன் கூப்பிட்டுத் தேடுகின்றோம்
தாத்தா தாத்தா

**- பூட்டப்பிள்ளைகள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்த்திட முடியாத

உறவினை வளர்த்தாய்
யாவும் உற்றுணர்ந்து அன்பு செய்தாய்
பறந்துமே சென்றாய் எம்மால்
பார்த்திட முடியாத தேசம்
சென்று விட்டாயோ
மறந்ததுமே இல்லை மேலும்
மறக்கப் போவதும் இல்லை ஐயா!!

**- உற்றார், உறவினர், நண்பர்கள் -**

## தொல்லையுமாதலால்.........

உடலாடையினை கழற்றி
முழு நிர்வாணமாகி..........

ஜீவாத்மாக மாறி
உடலாடையின்றி எந்நாளும்
பரமாத்மாவில் பதிந்து
இதுவும் அதுவாகி..........

வானமாய் வாயுவாய்
நீராய் நெருப்புமாய்
எங்குமே நிறைந்ததாய்
அருவுருவமற்றதாய்..........

இந்தளவு இவ்வுடலாடை
அருவருப்பானது மட்டுமல்ல
அடிக்கடி நோய் நொடியென்ற
தொல்லையும் தருவதால் !

**- திருமலை சுந்தா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணச்சடங்கு வினா விடைகள் - 60

1. **மரணச்சடங்கு என்பது வேறு எப்பெயர்களில் அழைக்கப்படுகின்றது?**

சாவீட்டுக்கிரியை, செத்தவீட்டுக்கருமம், மரணக்கிரியை, பிரேதக்கிரியை, சவக்கிரியை, உத்திரக்கிரியை, அபரக்கிரியை என அழைக்கப்படுகின்றது.

2. **பொதுவில் அபரக்கிரியை என்று சொல்வதேன்?**

அபரம் என்றால் பிந்தியது, உடலைவிட்டு உயர் போனபின் செய்யப்படுவதென்பது பொருள்

3. **அபரக்கிரியை உறுப்புக்கள் எவை?**

பிரேதக்கிரியை, சாம்பல்அள்ளுதல், அந்தியேட்டி, மாசிகம், ஆண்டுத்திதி, திவசம் என்பனவாகும்

4. **மரணக்கிரியை செய்யத்தக்கவர் யார்?**

சைவக்குருக்கள், அவர் நல்லறவு, ஒழுக்கம், கிரியை விளக்கம், சிவபூசை, அக்கினி காரியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

5. **சாவது உடலா? உயிரா?**

சாவது உடல் தான். உயிர் அனாதியாக உள்ளபொருள். அது அழிவது இல்லை. பல பிறவிகளை எடுத்தெடுத்துச் செய்த வினைகள் எல்லாம் தீர்ந்த பின் சிவகதி சேர்ந்து இன்புற்றிருக்கும்.

6. **உயிர் வாழ்வில் மூன்று நிலைகள் இருப்பதாகச் செல்கிறார்களே?**

இம்மை - இவ்வுலகில் உடம்பெடுத்து வாழும் நிலை

மறுமை - இவ்வுடல் இறந்த பின் வேறு உடல் எடுத்து வாழும் நிலை

அம்மை - வினைத்தொடர்புகள் எல்லாம் நீங்கிய பின் சிவகதியில் இன்புறும் நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. உயிர் உடலை விட்டுப் பிரியும் போது எந்த உறுப்பால் வெளியேறும்?**

இந்த உடலுக்குக் கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, மூக்குத்துவாரம் இரண்டு, வாய், மலசலவாசல், சலவாசல் ஆகிய ஒன்பது வாசல்கள் உள்ளது. இதில் ஏதாவதொரு வாயிலால் வெளியேறும். உயிர் வெளியேறும் போது அவதானித்தால் அந்த வாயிலில் அசைவு தெரியும்.

**8. உயிர் பிரியும் போது திருமுறைகள் பாடுவதேன்?**

உயிர் பிரியும் போது செய்யப்படுவது உக்கிராந்திக் கிரியை எனப்படும். உக்கிராந்தி என்றால் உயிர் கிளம்பிப் போதல் ஆகும். எல்லோருக்கும் விபூதிதாரணமும், சிவமூலமந்திர செபமும், திருமுறை பாராயணமும், விசேட தீட்சை பெற்றவர்களுக்குச் சிவபூசையும் செய்தல் வேண்டும். உயிர் சிவப்பேறு எய்துவதற்கு இது உபகாரமாகும்.

**9. இறந்த எல்லோருக்கும் இந்தக் கிரியைகள் பொருந்துமா?**

சமய தீட்சை பெற்றவர்க்கே இவை பொருந்தும், தீட்சை பெற்றவர்களே சைவசமயத்தவாவார். இக்காலத்தில் தீட்சை பெறாதோருக்கும் சவத்தில் வைத்துச் தீட்சை வைத்து மேற்படி கிரியைகள் செய்யப்படுகின்றன. சாதாரணமானவருக்கு 31நாளில் அந்தியேட்டி செய்யப்படும் அதுவரை துடக்கு உண்டு. விசேட தீட்சை, சிவபூசை உடையவர்களுக்குச் சவத்தில் வைத்தே அந்தியேட்டி செய்யப்படும். அவர்களுக்குப் பதினாறு நாட்கள் தான் துடக்கு உண்டு.

**10. மரணம் நிகழ்ந்ததை ஆலயத்துக்கு ஏன் தெரியப்படுத்த வேண்டும்.?**

மரணம் நடந்த இடத்திலுள்ள ஆலயத்தில் பூசை நடவாதிருப்பதற்கும் வணக்கர் வந்து சாவீட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமங்களைக் கவனிப்பதற்குமாகும். ஊரில் பிரேதம் இருக்கும் வரை அயலவர் எல்லோருக்கும் துடக்கு உண்டு.

**11. எந்த இடத்தில் வைத்துச் சவக்கிரியை செய்தல் வேண்டும்?**

வீட்டு முற்றத்தில் அல்லது மயானத்தில் பந்தலிட்டு அதில் வைத்துச் செய்தல் வேண்டும்.

**12. இறந்தவுடன் கை, கால் விரல்களைக் கட்டுவதேன்?**

உயிர் போய்ச் சிறிது நேரத்தில் உடல் விறைத்துவிடும் விறைக்குமுன் உடலை நேராக வளர்த்திக் கைவிரல்கள், கால் விரல்கள், வாய் என்பவற்றை நேராக்கிக் கட்டி விட்டால் உடல் ஒழுங்காக இருக்கும் என்பதற்காகவே சீலைத்துணியால் கட்டப்படும், கிரியையின் போது அவை அவிழ்க்கப்படும்.

**13. சவம் வைக்கப்படும் இடத்தின் மேல் வெள்ளை கட்டுவதேன்?**

இதுவரை உடலை ஆதாரமாகக் கொண்டிருந்த உயிர் உடலை விட்டு வெளியேறியதும் ஆதாரமின்றி அந்தரப்படும். உயிர் தங்குவதற்காகவே புதிய தூய்மையான வெள்ளை கட்டப்படும்.

**14. தலைமாட்டில் நெய்விளக்கு ஏற்றுவதேன்?**

உடலைவிட்டு வெளியேறிய உயிர் இருட்டில் அலையாமலும் அது செல்லும் வழிக்குத் தெய்வீக ஒளி உண்டாகவும், சிவசிந்தனையை அந்த இடத்தில் உண்டாக்குவதற்குமாகும்.

**15. இறந்த இடத்தில் முப்பத்தொரு நாளும் விளக்கு, தண்ணீர்ச் செம்பு வைப்பதும் சில இடங்களில் உணவு படைப்பது ஏன்?**

உடலைப்பிரிந்து முப்பத்தொரு நாளும் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும், அதன் பசி, தாகத்தைத் தீர்ப்பதற்காகவே இவை வைக்கப்படும்.

**16. மரண வீட்டில் பறை அடிப்பதேன்?**

மரணச் செய்தியை ஊருக்கு அறிவிப்பதற்காக, பேரிகைதாடனம் (பேரிகை - பறு, தாடனம் - அடித்தல்) என்று ஒரு கிரியையும் செய்வதுண்டு, கிரியை செய்யும் கரு இடத்தையும் பொருட்களையும் - சுத்தி செய்து பேரிகையில் மும்மூர்த்திகளையும் பூசித்து "எல்லா உலகுமுள்ள எல்லா உயிர்களும் நல்வாழ்வு வாழவும், கொடியோர் அடங்கவும் சகல செல்வங்களும் உண்டாகுக" என்ற பொருளுடைய மந்திரத்தைச் செல்லிப் பேரிகையை அடித்துக் கிரியைகளைச் செய்வோர். இது இப்பொழுது வழக்கத்தில் இல்லை.

**17. வீதியோரங்களில் வெள்ளைக் கொடி கட்டுவதேன்?**

துக்கத்தை வெளிக்காட்டுவதற்காக. சில இடங்களில் கறுப்புக் கொடி கட்டுவதும் உண்டு.

**18. மரணச் சடங்குகளில் தேவாரம், திருவாசகம் முதலிய திரு முறைகள் பாடக்கூடாதெனச் சிலர் கூறுகிறார்கள். இது சரியா?**

இது சில பிராமணர்களும், மூடர்களும் கூறும் தவறான கருத்து. மரணச்சடங்கில் சிவகும்பம் வைத்துச் சிவாக்கினி வளர்த்துச் சிவமந்திரம் சொல்லப்படுகிறதே. தமிழ் வேதமாகிய திருமுறைகள் பாடக்கூடாதென்பது எப்படிப் பொருந்தும். வடமொழி மந்திர நாதமும்தமிழ்மொழித் திருமுறைப் பண்களும் சூழலையும் மனங்களையும் தூய்மைப்படுத்துவதில் சமதையான தெய்வீகம் நிறைந்தவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. இறந்தவரின் உடலுக்கு அபிஷேகம்செய்வதேன்?**

சவத்தை தூய்மை செய்து சிவமாக்கும் பாவனை, மந்திர கிரியா பூர்வமாகச் சிவமாக்கப்பட்ட சிவகும்பத் தீர்த்தத்தால் அபிஷேகம் செய்வதால் சவமும் சிவமாகுந் தன்மை பெறும், ஆன்மாவும் தூய்மை பெறும். கிரியையின் போது வளர்க்கப்பட்ட சிவாக்கினி கொண்ட கொள்ளி வைத்துத் தகனம் செய்வதும் சிவமாகுந் தன்மை உண்டாவதற்கே.

**20. மஞ்சள் கலந்த தண்ணீரால் நீராட்டுவது ஏன்?**

மஞ்சள் சிறந்த கிருமிநாசினி ஆதலால் சவத்தையும் சுற்றாடலையும் தூய்மை செய்வதுடன் மங்கலமாகவும் இருக்கும் என்பதற்காகவே.

**21. சவத்துக்கு உறவினர் கால் கழுவுவதேன்?**

உரிமைக்காரர் இறந்தவருக்கு இறுதியாகச் செய்யும் மரியாதை இது. கிழக்கு மாகாணத்தில் இந்த நடைமுறை உண்டு. யாழ்ப்பாணத்தில் காலில் பூ வைத்து வணங்கும் வழக்கம் உண்டு.

**22. வாய்க்கரிசி போடுவதேன்? வீட்டிலா மயானத்திலா?**

செத்தவர் பசி தாகத்துடன் செல்லக் கூடாதென்பதற் காகவும் இதுவரை காலமும் உணவு தந்தவருக்கு வாய் நிறைய அரிசி போடும் பழக்கம் உண்டு.

**23. கொள்ளிக்குடம் எடுப்பது யார்?**

தந்தைக்கு மூத்த ஆண் பிள்ளையும், தாய்க்கு இளைய ஆண் பிள்ளையும் செய்வர். ஏனைய ஆண் பிள்ளைகளும் இதில் பங்கு கொள்வர். ஆண் பிள்ளை இல்லா விடத்துப் பெண்பிள்ளைகளும் பிள்ளைகள் இல்லாவிடத்து மனைவிக்குக் கணவனும், கணவனுக்கு மனைவியும் செய்வார். இவர்கள் இல்லையெனில் உறவினர் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24. சவத்துக்குக் கூறைச்சேலை வேட்டி சால்வை போடுதல் ஏன்?**

செத்தவர் இறுதியாத்திரை செல்லும் போது, வாழ்வில் அவர் அணிந்த ஆடைகளில் மிக உயர்ந்தவற்றை அவருக்கு அணிந்து மங்கலமாக வழி அனுப்பும் மனத்திருப்திக்காகவும்.

**25. பிரேதம் எடுத்துச் செல்லும் போது தலையா காலா முன்பக்கம் இருக்க வேண்டும்.**

கால் பக்கம் தான் முன் செல்ல வேண்டும்.

**26. பிரேதத்தின் தலை தெற்குப் பக்கம் இருக்கக் கூடியதாக வைப்பதேன்?**

இறந்தவரின் உயிர் செல்லும் திசை தெற்கு (தென்புலம்) ஆதலால் தலை தெற்கே வைக்கப்படும்.

**27. கடலையில் பிரேதத்தை எத்தனை முறை, எந்தப் பக்கமாகச் சுற்றி வர வேண்டும்?**

மூன்று முறை இடப்பக்கமாகச் சுற்றி வந்து தலைப்பக்கம் தெற்கே இருக்கக் கூடியதாக வைக்க வேண்டும்.

அபரக்கிரியையில் எல்லாம் இடமாகவே நடைபெற வேண்டும்.

**28. ஏன் இடப்பக்கமாகச் சுற்ற வேண்டும்?**

அபரக்கிரியை எல்லாம் வலம்மாறியே நடைபெறும். (பூர்வக்கிரியையில் வலமாகவும் அபரக்கிரியையில் இடமாகவும் நடக்கும்)

**29. ஏன் எல்லாக் கருமமும் மூன்றுமுறை செய்யப் படுகிறது?**

இந்தப் பிரபஞ்சத்தில் உண்மைப் பொருள்கள் பதி, பசு, பாசம் என மூன்று. ஆதலால் செய்யும் கருமங்கள் சரியாக நிறைவேறுவதற்கு மூன்றுமுறை செய்யப்படும். மூன்று முறையில் தான் யாவும் பூரணமாவது இயற்கை நியதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30. பிரேதம் கொண்டு போகும் போது அரிசி. தேங்காய்த் துண்டுகள், மஞ்சள் கலவை அல்லது நெற்பொரி எறிந்து கொண்டு போவதேன்?**

பிரேதம் போகும் வழியில் எதிர்ப்படும் பேய்,பிசாசு, மற்றும் துர்த்தேவதைகளைத் திருப்திப்படுத்துவதற்காகவாம்.

**31. கடலையில் சவத்திலுள்ள நகைகள் அரைஞாண் கயிறு என்பவற்றைக் கழற்றுவதேன்?**

இவற்றை எரியவிடுவதால் அல்லது மண்ணுள் மூடுவதால் எவ்வித பயனுமின்றி வீணாகிவிடும் என்பதால் அவற்றை எடுத்து இறந்தவர் பெயரில் தானதர்மம் செய்வர்.

**32. பிரேதமேடை அமைத்து மூன்று பக்கம் குச்சு (உதைகட்டை) நடுவதேன்?**

எரியும் போது விறகு பொறிந்து விழாமல் இருப்பதற்காக.

**33. உடல் எரிக்கும் போது நெஞ்சாங்கட்டை வைப்பதேன்?**

உடல் எரியும் போது தசையும் கொழுப்பும் உருகி எரிய எலும்புகூடு மேலெழுந்து விடாமல் அமர்ந்து எரிவதற்காக.

**34. யார் நெஞ்சாங்கட்டை வைக்க வேண்டும்?**

இது இடத்துக்கிடம் வேறுபடும். மச்சான், மாமன், அல்லது மருமகன் வைப்பது பொதுவான வழக்கம்.

**35. கொள்ளி வைத்தவர் அடியழித்துக் கற்பூரம் கொளுத்திக் கும்பிடுவதேன்?**

இறந்தவர் சிவகதி சேர வேண்டும். என்று வணங்குதலாகும்.

**36. காடாற்றுதல் என்றால் என்ன? எப்படிச் செய்ய வேண்டும்?**

இதனைக் காடாற்றுதல், சம்பல் அள்ளுதல், அஸ்தி சங்சயனம் என்றும் சொல்வர் எரித்த மூன்றாம் நாள் எரித்த இடத்தின் சூடு ஆறக்கூடியதாத் தண்ணீர் ஊற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரச் செய்து, நீறுபூத்திருக்கும் என்பு சாம்பலுக்கு அபிஷேகம் செய்து வழிபட்டே சாம்பல் அள்ளுதல் வேண்டும். ஒரு புதுப்பாத்திரத்தில் பால் விட்டு அதற்குள் கால், தொப்புழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய பகுதிகளிலிருந்து எலும்புகளையும் சாம்பலையும் எடுத்துப் போட்டு வெள்ளைத் துணியால் மூடிக் கொண்டு போய் ஆழமான (ஆறு, கடல், குளம்) தீர்த்தத்தில் இட வேண்டும்.

**38. எரிந்த சாம்பலை ஏன் புண்ணிய தீர்த்தத்தில் போட வேண்டும்?**

இல்லை, அது தீய சக்திகளுக்கு இடமாகிவிடும். தூரதேச புண்ணிய தீர்த்தங்களுக்குக் கொண்டு போகத் தேவையானால் எங்காவது பாதுகாப்பான இடத்தில் மண்ணில் தாழ்த்தி அல்லது மரத்தில் வைத்திருக்கலாம்.

**39. மரண வீட்டில் எட்டு நாட்களுக்குச் சமைக்கக் கூடாது என்ற விதிமுறை உண்டா?**

அப்படி ஒரு விதி இல்லை. இறந்தவர் சார்பில் ஏற்பட்ட துக்கம் காரணமாக வீட்டில் சமைக்கக் கூடிய நிலைமை இருக்காது. உறவினர் நண்பர்களே உணவு கொடுப்பர் சில இடங்களில் அந்தியேட்டி வரை இந்த நிலை நீடிக்கும்.

**40.எட்டுச் செலவு என்பதென்ன?**

இது பத்ததிகளிலோ கிரியை முறைகளிலே இல்லாத ஒன்று, ஆனால் நடைமுறையில் உள்ளது. இறந்த எட்டாம் நாள் அவருக்கு விருப்பமான உண்பன, தின்பன, பருகுவன முதலான உணவுகளைத் தேடிப் படைத்துக் கும்பிட்டு இதில் ஒரு பகுதியை எடுத்துப்போய் முச்சந்தியிலே பேய், பிசாசு, இராட்சதர்களுக்காக் கழித்து விடப்படும். இது இரவில் தான் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**41. அந்தியேட்டி 31ஆம் நாள் செய்வதேன்?**

உடலைவிட்டுப் பிரிந்து உயிர் 31 நாட்கள் அந்த இடத்தில் நிற்கும் என்பது சாத்திர உண்மை. 31 ஆம் நாள் கிரியையுடன் அது செல்ல வேண்டிய கதிக்குச் செல்லும். ஆதலால் இறுதியில் செய்யப்படுவதாகிய கருமம் இது ஆகும். (அந்திய - இறுதி இட்டி - கிரியை)

**42. அந்தியேட்டியில் செய்யப்படும் கருமங்கள் எவை?**

இறந்த 31ஆம் நாள் புண்ணிய தீர்த்தக் கரையில் பந்தலிட்டு அல்லது அங்குள்ள மண்டபத்தில் செத்தவரின் சரீரத்துக்குப் பதிலாகத் தருப்பையில் "பத்தலிகை" எனும் பிரதி பிரதேசதம் அமைத்து இறந்த சவத்தில் செய்தது போல மரணக்கிரியைகளான பிரதேசுத்தி தகனம், காடாற்றுதல் முதலான கருமங்கள் எல்லாம் நடைபெறும்.

**43. அந்தியேட்டியில் தொடர்ந்து செய்யப்படும் தத்துவபூசை என்பதென்ன?**

மண்டபத்தில் தென்கீழ்த்திசையில் 25 சதுர தண்டில் மிட்டு பஞ்சபூதங்களையும் அவற்றைச் சார்ந்த கலைகள் அதிதெய்வங்களையும் குறிக்கும் ஐந்து நிறப் பொடிகளைப் பரப்பி (பிருதுவி- மஞ்சள், அப்பு - பச்சை, தேயு - சிவப்பு, வாயு - கறுப்பு, ஆகாயம் - வெள்ளை பூசிப்பதாகும். இதனால் இறந்தவருக்கிருந்த பஞ்சபூதத் தொடர்புகள் நீக்கப்படுகிறது. என்பது பொருள்.

**44. அந்தியேட்டியைப் பிராமணர்கள் செய்யலாமா?**

இல்லை. சவக்கிரியை செய்த சைவக்குருக்களே செய்தல் வேண்டும். தீட்சை, திருமணக்கிரியை சவக்கிரியை, அந்தியேட்டி ஆகியவற்றைச் செய்வது சைவக்குருமார் என்பதுதான் தமிழர் வழமை ஆரியர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் பிராமணர் கோயிற்கிரியைக்கே உரியவர். இப்பொழுது சில பிராமணர்கள் செய்தாலும் பொதுவாகப் பிராமணர் செய்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**45.சுண்ணமிடித்தல் என்றால் என்ன?**

இது சுர்ணோற்சவம் என்று சொல்லப்படும். இறந்தவரின் உடலை அபிஷேகம் செய்து தூய்மையாக்கி, நல்ல ஆடை அணிவித்துக் கொண்டு வந்து பந்தலின் மேற்கருகில் வைத்த உரலில் மஞ்சளும் அறுகும் இட்டுத் திருப்பொற்சுண்ணம் பாடிக் கொள்ளிகாரகர் இடித்தல் வேண்டும்.

**46. கோயிலில் சுவாமிக்குச் சூர்ணோற்சவம் செய்யப்படுகிறதே சவத்துக்குச் செய்யலாமா?**

ஆம், இறந்தவர்குச் சிவமாந் தன்மையை உண்டாக்கிச் சிவகதி சேர்க்கும் நற்கருமமே இது இருப்போருக்கும் தெய்வீகச் சூழலை ஏற்படுத்தி மனநிறையைத் தருவதால் இது செய்யப்டுகிறது.

**47. வீட்டுக்கிரியை எனப்படுவன எவை?**

தீர்த்தக்கரையிலே அந்தியேட்டி முடித்து வீட்டில் வந்து செய்யப்படும் கிரியைகளாகும். நக்னதானம் சபிண்டீகரணம் வரையுள்ளவை.

**48. சபிண்டிகரணம் என்றால் என்ன? வீட்டுக் கிரியையைச் சபிண்டீகரணம் என்றும் சொல்வதேன்?**

உயிரைப் பிதிர்களுடன் சேர்த்தல் என்பது பொருள் அரிசி மா, தேன், தயிர், எள்ளு, கதலிப்பழம் என்பவற்றை நன்கு பிசைந்து நான்கு உருண்டைகளாக்கி வாழை யிலையில் நன்கு பிசைந்து நான்கு உருண்டைகளாக்கி வாழையிலையில் தர்ப்பை வைத்து அதன்மேல் பிதிர்வர்க்கத்துக்கு மூன்று மாதருவர்க்கத்துக்க மூன்று பிண்டங்களை வைத்து அவற்றின் கிழக்கே இறந்தவரைக் குறித்து ஒரு பிண்டம் வைத்து உரிய பூசை வழிபாடுகள் செய்ய எள்ளுந் தண்ணீரும் இறைத்து இறந்தவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிண்டம் பிதிர்களின் பிண்டங்களுடன் சேர்க்கப்படம். இது இறந்தவரின் உயிரைப்பிதிரர்களுடன் சேர்த்துவிடும் கருமமாகும்.

**49. ஏகோதிட்டம் என்று ஒரு கிரியை செய்யப்படுகிறதே அது ஏன்?**

இறந்தவரின் உயிர் மறு உலகு செல்லும் வழியில் பசி தாகம் மற்றும் கஷ்டங்களை நீக்கும் பொருட்டு ஒருவருட கால வாழ்வுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும், ஒரு புரோகிதரில் இறந்தவரின் உயிரை ஆவாகனம் பண்ணிக் கொடுத்தலாகும். இந்தப் புரோகிதர் ஒரு வருடம் அல்லது ஆறு மாதத்திற்குத் தீர்த்த யாத்திரை போக வேண்டும்.

**50. இப்பொருட்கள் அந்த ஆன்மாவுக்கு உதவுமென்பதை நம்பலாமா?**

ஒரு இடத்தில் நடக்கும் காட்சியை விஞ்ஞான ஒலி, ஒளி அலைகளாக மாற்றி படமாக்கிப் பல ஆயிரம் கிலோமீற்றகருக்கப்பால் தொலைக்காட்சியின் திரையில் காட்டுகிறதே. இதை நம்புகிறோமல்லவா. மெஞ்ஞானத்தில் அருவமான உயிருக்கு இப்பொருட்கள் எல்லாம் அருவமாகி உதவும் என்பதை ஏன் நம்பமுடியாது விஞ்ஞானத்தில் அதற்குரிய சாதனங்கள் கருவிக் பயன்படுவது போல மெஞ்ஞானத்தில் மந்திர சக்தி பயன்படுகிறது எனக் கருதலாம்.

**51. இறந்தவருக்குச் செய்யப்படும் தான தர்மங்கள் எப்படி அவரின் உயிருக்கு போய்ச் சேரும்?**

இதுவும் முன் சொன்னது போன்றது தான். இவ்வுலகில் வாழும் போது தேவர்கள் நமது சேம நலன்களுக்கு உதவுவது போல மரணத்தின் பின் பிதிர்கள் என்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவர். பூர்வக் கிரியையில் தேவர்க்குப்பிரீதியாயும் அபரக்கிரியையில் பிதிரர்க்குப் பிரீதியாயும் பூசை வழிபாடு செய்வது இதனை உறுதிப்படுத்தும்.

**52. பிதிர்க்கடன் செய்வதேன்?**

இது சிரத்தையோடு செய்யப்படுவதால் சிரார்த்தம் எனப்படும். இறந்தவரின் ஆத்மா எந்த நிலையில் எங்கிருந்தாலும் அவர் பெயரில் செய்யப்படும் சிராத்தங்கள், தான தர்மங்களின் பயனை பிதிரர்கள் அவருக்கே சேர்ப்பிப்பர். அதனால் அவர் சாந்தியும், ஆன்ம ஈடேற்றமும் அடைவர். செய்யவருக்கு ஆசியும் வழங்குவார்.

**53. பஞ்சமி என்றால் என்ன? பஞ்சமியில் ஒருவர் இறந்தால் என்ன செய்ய வேண்டும்?**

அவிட்டம், சயம், புரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சததிரங்களில் ஒன்றில் இறந்தால் அவிட்ட பஞ்சமி என்பார்கள். இது பஞ்சமித்திதி என்பதல்ல. உண்மையில் தனிஷிடா பஞ்சமி என்பதே சா. அவிட்ட பஞ்சமிக்கென்று சாந்திக் கிரியையுண்டு. அதனை அந்தியேட்டிக் கிரியையின் பின் செய்ய வேண்டும். இல்லையேல் தொடர்புள்ள வேறு பலருக்கு மரணம் நேரும் என்பது நம்பிக்கை, சாந்தி செய்யாமல் கோழிக்குஞ்சோ, முட்டையோ, கமுகம் பிள்ளையோ பெட்டிக்குள் வைத்துவிடுவது புத்தி பூர்வமானதல்ல. ஒரு உயிருக்காக வேற உயிர்களை வதைப்பது சைவத்துக்குப் பொருந்தாது.

**54. ஆடி, புரட்டாதி, மார்கழி மாதங்களில் பிதிர்க்கடன் செய்வதேன்?**

இந்த மாதங்கள் பிதிர்கள் பூமியை நோக்கி வந்து தான தர்மங்களை கற்கும் காலம் என் ஞானியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி வைத்துள்ளார்கள். ஆதலால் அக்காலங்கள் பிதிர்க்கடன் செய்ய உகந்தவை. ஆடி அமாவாசையும், புரட்டாதி மஹாளய பட்ஷமும் இதற்கு விசேட காலங்களாகும்.

**55. அகால மரணமடைந்தவரின் கிரியைகள் எப்படிச் செய்யப்பட வேண்டும்?**

தானாகத் தன் உயிரைப் போக்கிக் கொண்டவர்களுக்கும், விபத்தில் உடல் சிதைந்தவர்களுக்கும் சவக்கிரியை செய்வதில்லை. ஆறு மாதத்தின் பின் தர்ப்பையில் அவ்வுயிரை வருவித்துச் சவக்கிரியையும் அந்தியேட்டியும் ஒன்றாகச் செய்யப்படும்.

**56. தாய் தந்தையருக்கு எவ்வெக் காலங்களில் விரதமிருந்து பிதிர்கடன், தானதர்மாங்கள், வழுபாடுகள் செய்யத்தகும்?**

பொதுவாகச் சிராத்தம் செய்யும் திதியிலும், தாய்க்குப் பூரணை காலங்களிலும், தந்தையருக்கு அமாவாசைக் காலங்களிலும் செய்வது தகும். தந்தையாம் தன்மையுமைய சூரியனின் கிரணங்கள் (கதிர்கள்) அமாவாசை காலத்திலும், தாயாந்தன்மையுமைய சந்திரனின் கிரணங்கள் பூரணையிலும் பூமியில் தாக்கத்தை உண்டாக்குவதால் பிதிர்கள் பூமியை நோக்கிவரும் காலமாகும். ஆதலால் தந்தைக்கு அமாவாசையும், தாய்க்குப் பூரணையிலும் உகந்தவையாகும்.

**57. கிடங்கு வெட்டுவதற்கு மூவர் மட்டும் செல்வதேன்?**

கிடங்கு வெட்டுவதற்கு மண்வெட்டி, அலவாங்கு, கோடரி ஆகிய மூன்று கருவிகள் தேவைப்படும். ஒவ்வொருவர் ஒவ்வொன்றுடன் போவதால் மூவர் செல்ல வேண்டும் எனும் வழக்கம் வந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**58. கிடங்கில் மூன்று பிடி மண் போடுவதேன்?**


உரிமைக்காரர் பிரேதத்தின் தலை நெஞ்சு, கால் ஆகிய மூன்று இடங்களில் போட வேண்டும். ஆதலால் மூன்று பிடி மண் ஆயிற்று எனக் கொள்ளலாம்.

**59. துடக்கு என்றால் என்ன?**

துடக்கு என்றால் இறப்பு, பிறப்பு ருதுவதல் காரணமாக நிகழும் அசுகுசுப்பான தூய்மையின்மை அகப்புறச் சூழ்நிலையைக் குறிக்கும். சம்பந்தப்பட்டவரின் உடலிலிருந்து வெளிவரும் துர்நாற்றம் தொடர்பான திரவங்கள், கிருமிகள் முதலியவற்றால் உண்டாவதாகும். இறப்புக்காரணமாகத் தொடர்புடையவர்களுக்கு உண்டாகும் மனத்தகில், அதிர்ச்சி, அமைதியின்மை கவலைகள் மிகுந்த சூழ்நிலை துடக்கு எனப்படும். இரத்தத்க்குள்ளாவதை எமது அனுபவத்தில் காணலாம்.

**60. ஆலயங்கள் விழாக்களுக்கு மரணமானவரின் உறவினர் செல்லலாமா?**


இல்லை, துடக்கு உரியவர்கள் துடக்கு கழிக்கும் வரை கோயிலுக்குப் போகக் கூடாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


**அமரர்.**

**சின்னத்துரை பரமானந்தம்**

அவர்களின் மறைவைக் கேட்டவுடன் ஓடோடி வந்து ஆறுதல், கூறியதுடன் அஞ்சலி செலுத்திய நல் நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அன்னாரின் இறுதி சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவருக்கும் மலர் வலயங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பதாதை காட்சி படுத்திய நிறுவனத்திற்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த நல் உள்ளங்களுக்கும் பல வகையிலும் உதவிய உற்றார் உறவினர் அயலவர் நண்பர்களுக்கும் எங்கள் நன்றியை

தெரிவித்துக்கொள்கின்றோம்

**- குடும்பத்தினர் -**



**17/2 பாரதிபுரம்**
**கன்னியாவீதி**
**திருக்கோணமலை**

- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதா
இந்த மாற்றம் உலக நியதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org